

‘பிரேமா’வைக் கொல்ல 9 தற்கொலைப் படையினர் காத்திருந்தனர்!

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா, இவ்வருடம் நடைபெற்ற மேதின ஊர்வலத்தில் கலந்துகொண்டு வீதிகளில் செல்லும்போது அவரை கொலை செய்வதற் (4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 85 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 1 இதழ் 242
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 17 – 10 1993

திருமலை மாவட்டத்தில் ‘ஒபரேஷன் சென்கொன்’

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் இராணுவத்தினர் பாரிய இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை ‘ஒபரேஷன் (4ம் பக்கம் பார்க்க)

‘சுதந்திரமாக தமிழர் வாழ ஆயுதம்ஏந்துவதுதான் வழி’

(யாழ்ப்பாணம்)

“தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ ஒரே வழி ஆயுதம் ஏந்துவது தான்” இவ்வாறு விடுதலைப் புலிகள் இதழின் ஆசிரியர் தலையங்கம் தெரிவித்துள்ளது.

இன்று வெளியாகும் விடுதலைப் புலிகள் ஏட்டின் ஆசிரி (2-ம் பக்கம் பார்க்க)

தற்கொலைப்படை ஊடுருவல்;

கொழும்பில் நேற்று மட்டும் 500 தமிழ் இளைஞர்கள் கைது!

பெரும் படையும் குவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் புலிகளின் தற்கொலைப் படைத் தாக்குதல் எவ்வேளையிலும் நடைபெறலாமென்று புலனாய்வுத் துறையினர் அறிவித்ததையடுத்து நேற்று மட்டும் சுமார் 500 தமிழ் இளைஞர்கள் கொழும்பில் சகல பகுதிகளிலும்கைது செய்யப்பட்டு 10 முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

சிலாவியிலும் அதனை படையினர் மேற்கொண்ட லாக புலிகள் கொழும்பில் கொட்டி பொதுமக்கள் மீதும் தாக்குதலுக்குப் பழிவாங்க (4-ம் பக்கம் பார்க்க)

கொழும்பில் தமிழர் வீட்டில் பெருமளவு ஆயுதங்கள் மீட்பு?

(கொழும்பு)

பேலியகொட பொலிசார் முகத்துவாரத்தில் உள்ள வீடொன்றிலிருந்துபெருமளவு ஆயுதங்களைக் கண்டுபிடித்து மீட்டுள்ளார்களாம்.

இந்த ஆயுதங்களுக்கும் அண்மையில் முகத்துவாரக் கடற்கரையில் கண்டுபிடிக்கப் பட்ட தற்கொலைப்படையினர் அணியும் மார்சட்டைக்கும் தொடர்பு இருப்பதாகப் பொலிசார் கருதுகின்றனராம்.

முகத்துவாரத்திலுள்ள (4-ம்பக்கம் பார்க்க)

இல. வெளியுறவு செயலர் இந்திய அமைச்சர் சந்திப்பு

(புதுடில்லி)

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு தினேஸ்சிங் உடன் இலங்கை வெளியுறவுத் துறைச் செயலர் திரு. பேர்னாட் திலகரட்ண நேற்று சந்தித்துப் பேசியுள்ளார்.

இருதரப்பு உறவு குறித்தும், சார்க் விவகாரம் குறித்தும் இருவரும் சிலமணி நேரம் பேச்சுக்கள் நடாத்தியுள்ளனர்.

மேலும் இலங்கை-இந்திய கூட்டுக் கமிஷன் கூட்டத்தை இவ்வாண்டு இறுதிக்குள் (4-ம் பக்கம் பார்க்க)

சுதந்திரக் கட்சிக்கு இனி எதிர்காலமே இல்லை

அநுரா பேட்டி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இனிமேல் எதிர்காலமே இல்லை. அது 30 வருடம் சென்றாலும் ஒருபோதும் ஆட்சியைக் கைப்பற்றவேமுடியாது. இவ்வாறு திரு அநுரா பண்டாரநாயக்கா பி.பி.சிக்கு நேற்று அளித்த பேட்டியில் கூறினார்.

அவர் தனது பேட்டியில் மேலும் கூறியதாவது:

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி (4-ம் பக்கம் பார்க்க)

அமெ. பாதுகாப்பு ஆலோசகர் பிரதமர் ரணில் சந்திப்பு

(நியூயோர்க்)

அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகருடன் இலங்கைப் பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் நியூயோர்க்கில் பேச்சுக்கள் நடாத்தியுள்ளார்.

இச் சந்திப்பின் போது இலங்கையில் வடக்கு—கிழக்கு போர் குறித்தும் பிரதமர் ரணில் அவருக்கு விளக்கமளித்துள்ளார்.

இதேவேளை திரு. ரணில் விக்கிரமசிங்க அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. வாறன் கிறிஸ்தோபருடனும் இலங்கையில் விடுதலைப்புலிகளுடனான யுத்தம் பற்றி பேச்சுக்கள் நடாத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது —இ

‘குவாக்கஸ்’ குழு யாழ். வருகிறது

(கொழும்பு)

சர்வதேச சமாதானக் குழுவான ‘குவாக்கஸ் பீஸ்’ குழுவினர் இவ்வாரம் யாழ்ப்பாணம் வரவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்கள் விடுதலைப்புலிகளை சந்தித்துப் பேச்சுக்கள் நடாத்துவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது

ஏற்கனவே பல தடவைகள் (4-ம் பக்கம் பார்க்க)

தமிழர் மத்தியில் பெரும் அச்சம்

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தமிழர் தொடர்ந்தும் கைது செய்யப் படுவதும் அவர்கள் தடுப்பு முகாம்களில் அடைக்கப்படுவதும் குறித்து தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளதாம்.

இதனால் பெருமளவு தமிழர் மிக அவசிய தேவைகளை தவிர வேறு எக்காரணத்திற்காகவும் வீட்டிற்கு வெளியே (4-ம் பக்கம் பார்க்க)

காமினியை இணைக்க ஐ. தே. க. தீவிர முயற்சி

(கொழும்பு)

காமினி திஸநாயக்காவை ஐக்கிய தேசியக் கட்சியில் இணைத்து மீண்டும் தென் மாகாண, வடமேல் மாகாண சபைகளின் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி முயற்சித்து வருகின்றது என்று ‘ராவய’ ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார். (4ம் பக்கம் பார்க்க)

ஆளும் கட்சியில் ‘அநுரா’ சேருவார்?

(கொழும்பு)

திரு. அநுரா பண்டாரநாயக்கா ஆளும் கட்சியான யூ.என்.பி. கட்சியில் சேர்வதற்கான அறிகுறிகள் தற்போது தென்படுவதாக அரசியல் அவதானிகள் கருதுவ (2-ம் பக்கம் பார்க்க)

தமிழக மீனவர் மீதான

தாக்குதலை தடுக்க இலங்கை இணக்கம்

(புதுடில்லி)

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இலங்கை ஒப்புக் கொண்டுள்ளது.

கடந்த இரு தினங்களாக புதுடில்லியில் இடம்பெற்ற பேச்சுக்களின் பின் இலங்கை வெளியுறவுச் செயலர் திரு. பேர்னாட் திலகரட்ணவும், இந்திய வெளியுறவுச் செயலா (2-ம் பக்கம் பார்க்க)

விளம்பரம்

விற்பனைக்கு

(1) 10 அடி 8 அங்குல நீளமான இரண்டு தனி மூடிய கண்ணாடி அலுமாரி. (2 5 அந்தர் அலுமினிய மொடல் தராசு விற்பனைக்குண்டு. சி. பரமசாமி வெற்றிலை வியாபாரம், மார்க்கெட், பெரிய கடை, யாழ்ப்பாணம். (கி-521)

O/L கணிதம் 92, 93

Distinction, Credit பெறுபேறடைய விளக்கமுடை திருத்தல் முறையும் ஆரம்பத்திலிருந்து மீட்டல் முறைப்படியும் B. Sc(Cey) ஆசிரியரால் கற்பிக்கப்படும் 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. (சி-519)

தாரணி
(கேள்வி பதில் சஞ்சிகை)

சோதிடம், மருத்துவம், குடும்ப, உற்றோர் பிரச்சினைகள், அறிவியல், இலக்கியம் சம்பந்தமான கேள்விகளை அஞ்சலட்டையில் அனுப்பலாம். பதிலளிக்கப்படும்:- தாரணி, 55, யமுனா வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (ஏ-3484)

தரன் ஸ்ரூடியோ

மின்சார வசதியுடன் உடனுக்குடன் பாஸ்போர்ட், அடையாள, என்லாஜ்மென்ற் படங்களும், அவசர றபர் சீல், மாட்சாண்ட் பாயஸ் பிளாஸ்ரிக் வேலைகள் மற்றும் விளம்பர போட் வேலைகளுக்கும்: தரன் ஸ்ரூடியோ, 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (ஏ-3470)

தவறிவிட்டது

13-10-93ல் சுதுமலை அம்மன் கோவில் அருகில் தவறவிட்ட செப்பிங் பேக் பார்சலை எடுத்தவர்கள் பாஸ், குடும்ப அட்டை, அடையாள அட்டை, தபால்கள், படம், கலியாண பதிவு ஆகியவற்றை தயவுசெய்து கருணைகூர்ந்து அம்மன் கோவிலில் போட்டுவிடவும் புண்ணியம் கிடைக்கும். கணபதி, மானிப்பாய். (கி-528)

O/L MATHS

ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 26 வருட அனுபவமுடைய ஆசிரியரால் 20 நாட்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டுக்குளி. (சி-527)

துர்க்கா சஞ்சிகை

(யாழ்ப்பாணம்)

"துர்க்கா" சஞ்சிகை இம்மாதம் 24-ம் திகதி வெளிவர இருக்கின்றது. இந்து கலை இலக்கியம் சம்பந்தமான விடயங்கள் இச்சஞ்சிகையில் இடம் பெறும். —ம

ஹொட்ஸ்பிறிங்
3 ஆண்டு பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

"ஹொட் ஸ்பிறிங்" பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் மூன்று ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. ஈழத்தமிழரின் பிரச்சினைகளையும் போராட்ட சூழ்நிலையையும் சர்வதேச மட்டத்தில் பிரபல்யப்படுத்தும் பாரிய இப்பத்திரிகை சிறப்புற செய்து வருகிறமை குறிப்பிடத்தக்கது. (எஸ்-கி

20-வது ஆண்டு
நினைவஞ்சலி

வழக்கறிஞர்
V. S. கார்த்திகேசு
J. P. U. M. அவர்கள்

மலர்வு: 14-9-1893
உதிர்வு: 17-10-1973
திதி: 5-11-1993

உங்களின்
நூற்றாண்டு
நினைவுகள்
எங்களின்
நெஞ்சங்களை
விட்டகலாது.

அன்பு
பிள்ளைகள்
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்

'தாரகம்'
5, அத்தியடி புதியவீதி,
யாழ்ப்பாணம்.

'தமிழகம்'
கொடிகாமம்.

(ஏ 3504

வயிற்றோட்ட நோயினால்
132 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் கடந்த மாத ஆரம்பத்திலிருந்து இதுவரை 132 பேர் வயிற்றோட்ட நோயினால் பாதிக்கப்பட்டு, யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இதில் ஒரு பகுதியினர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இந்த நோயினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களில் 21 பேர் கொலரா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என பரிசோதனை அறிக்கை மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரம் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்: குருநகர்ப் பகுதி, சம்சன் குடியேற்றத் திட்டப் பகுதிகளிலிருந்தே இந்த நோயினால் அதிகமானோர் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார்கள் என்றும், கடந்த வாரத்திலும் பார்க்க இந்த வாரத்தில் இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மிகவும் குறைவு என்றார்.

யாழ். மாநகரசபை சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்ட தீவிர முயற்சியினாலும், பொதுமக்களின் ஒத்துழைப்பினாலும் இந்த நோய் மேலும் பரவாமல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்ததென்றும் அவர் தெரிவித்தார். -162

தமிழக மீனவர்

1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு ஜே. என். டிக்ஷிற்றும் நேற்று கூட்டாக விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கை மேலும் கூறுகையில்: இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர் சுட்டுக்கொல்லப்படுவது குறித்து இரு நாடுகளும் தீவிர கவனம் மேற்கொண்டு இதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி சம்பந்தப்பட்ட இரு தரப்பு அதிகாரிகளுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் நிலைப்பாட்டை இலங்கை அரசு முழு கவனத்தில் எடுத்துக் கொண்டது. இலங்கை கடற்படை தமிழக மீனவர்மீது தாக்குதல் நடத்துவதை தவிர்த்து வந்ததாக இலங்கை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இச்சந்திப்பில் இரு நாட்டு வெளியுறவு செயலர்கள், இரு நாட்டு தூதர்கள், கடற்படை அதிகாரிகள் கலந்துகொண்டனர். —சி

ஆளும் கட்சியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக பி.பி.ஸி. நேற்று அறிவித்தது.

அடுத்தாண்டு நாடு முழுவதிலும் தேர்தல்கள் நடைபெற இருப்பதினால் திரு அநுராவைப் போன்று மக்களைக் கவரும் செயல் வீரர்களை ஆளும் கட்சியான யூ.என்.பி. கட்சி தன்வசம் இழுத்துக் கொள்வதில் ஆர்வம் காட்டி வருகின்றது.

திரு. அநுர பண்டாரநாயக்கா யூ என் பி கட்சியில் இணைந்து கொண்டால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு வருங்காலத்தில் பெரும் பாதிப்பு ஏற்படும் என்றும் பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது. —வி-கி

சுதந்திரமாக

1-ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible] சுருக்கம் வருமாறு:

தமிழ் மக்கள் உரிமை பெற்றும் சுதந்திரமாகவும், கௌரவமாகவும் வாழவழி ஒன்றுதான் உண்டு அது ஆயுதம் ஏந்துவது தான். பேரினவாத ஜனாதிபதி விஜயதுங்க அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் ஜனாதிபதியாக வருவதற்காக அரசியல் சித்து விளையாட்டு சிங்கள மக்களை கவருவதற்காக தமிழின மக்களுக்கெதிராக பேரினவாத வெறியை கிளறி அதற்குப் பகிரங்கமாகவே தலைமை கொடுத்து தன்னை ஒரு சிங்கள இனத்தின் காவலரென்று காட்டி வருகின்றார்.

மண்கிண்டிமலை, கிளாலி என்று புலிகள் இயக்கம் அடுத்தடுத்து பெற்றுவரும் வெற்றிகளால் சிங்களப் பேரினவாதம் கடும் சீற்றம் அடைந்துள்ளது. இச் சீற்றத்தை சிங்கள தேச மந்திரிகளும், தொடர்பு சாதனங்களும், புத்திஜீவிகளும் மேலும் வளர்த்து சிங்கள தேசத்தில் ஒரு பேரினவாத புயலைக் கிளப்பி தமிழினத்தை பூண்டோடு அழிக்க முயல்கின்றார்கள்.

பேச்சுக்கள், மூலமோ சமரசப் பாதைகள் மூலமோ தமிழினத்துக்கு உரிமைகள் கிடைக்கும் என்ற கனவை இத்துடன் நிரந்தரமாக கலைத்து விடவேண்டும். எனவே வேறு வழியின்றி ஆயுதப் பயிற்சி பெற்று அழிக்கவரும் சிங்களப் படைகளை அடித்து விரட்டி எமது தாயகபூமியை மீட்டு தனி அரசொன்றை நிறுவுவது தான் தமிழினத்துக்குள்ள ஒரே வழி இல்லையேல் தமிழினம் அழிந்துவிடும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. —வி-கி

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

அரசினர்
பொது (போதனா) வைத்தியசாலை
யாழ்ப்பாணம்

கேள்வி விளம்பரம்
சலவை ஒப்பந்தம் - 1994

யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையின் அழுக்குத் துணிகளை 01-01-1994 தொடக்கம் 31 12.94 வரை சலவை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் 29-10-93 காலை 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் உரிய பத்திரங்களில் இரு பிரதிகளாக நிரப்பி அனுப்பப்படல் வேண்டும். எனது பெயருக்கு ரூபா 150/- ஐ வைத்தியசாலைக் காரியாலயத்தில் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் நேரில் ஒப்படைக்கப்பட்டால் ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டு வழங்கப்படும். ஒப்பந்தகாரர் விரும்பினால் கேள்விப்பத்திரங்களை பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம்.

கேள்விப்பத்திரங்களை அவைகள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத்திகதிக்கு முதல் நாள் நண்பகல் 12 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் என்னால் வழங்கப்படும். அதற்குரிய பத்திரங்களில் இல்லாவிடில் நிராகரிக்கப்படும். முடிவுத் திகதியன்று காலை 10.00 மணிக்குப்பின் வரும் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தகாரர் பிணைப்பணமாக ரூபா 1500/- செலுத்தி ஒப்பந்தத்தில் மேல் கைச்சாத்திடல் வேண்டும். ஏற்றுக்கொள்ளப்படாத கேள்விப்பத்திரங்களின் மேல் செலுத்தப்பட்ட பணம் ஒப்பந்தம் கைச்சாத்தாகியதும் திருப்பிக் கொடுக்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 29-10-93 காலை 10 மணிக்கு எமது காரியாலயத்தில் திறக்கப்படும் போது கேள்விதாரர்களோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ பிரசன்னமாயிருக்க வேண்டும்.

மேலதிக விபரங்களை இவ்வைத்தியசாலையின் கணக்காளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி
(செல்வி) ந. கனகரத்தினம்
பணிப்பாளர்,
அரசினர் பொது வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.

பொது வைத்தியசாலை
யாழ்ப்பாணம்,
1993-10-15.

(ஏ-3505)

முக்கிய அறிவித்தல்

புங்குடுதீவு - நயினாதீவு
ப. நோ. கூ. சங்கம்

கிளைக் குழுத் தேர்தல் - 1993

ஏற்கனவே ஒத்தி வைக்கப்பட்ட தேர்தல் பின்வரும் திகதிகளில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றேன்.

23 - 10 - 1993 சனிக்கிழமை: நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல்.
30 - 10 - 1993 சனிக்கிழமை: தேர்தல்.

நா, தவநாதன்
தேர்தல் உத்தியோகத்தர்.

14 - 10 - 1993

(ஏ-3501)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை

கல்விப்பட்டப்பின் டிப்ளோமா
ஆண்டுப் பரீட்சை - 1992

கல்விப்பட்டப்பின் டிப்ளோமா முழு நேரம் / பகுதி நேரம் I, பகுதி நேரம் II போன்ற பரீட்சைகளுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தங்கள் அனுமதி அட்டைகளை யாழ் பல்கலைக்கழக பரீட்சைக்கிளையில் அலுவலக நேரத்தில் 18 - 10 - 1993 தொடக்கம் காலை 9-00 மணி முதல் மாலை 4-00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

பரீட்சைகள் 01 - 11 - 1993 தொடக்கம் 09 - 11 - 1993 வரை நடைபெறவுள்ளது.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

(ஏ-3506)

மணிவாக்கு

'சுதந்திரம்' என்பதே
அவர்கள் போர்க்குரல்;
சுதந்திரம் இல்லையேல்
செத்துமடிய உரிமை.
—ஜி. எச். பேக்கர்.

நமது நோக்கு

கூப்பரின் கணிப்பீடு!

"வேறு வழியில்லை; இரண்டில் ஒன்று பார்த்து விடுவது என்ற வகையில் இராணுவ நடவடிக்கை ஒன்றே வழி என அரசியலர் முடிவுக்கு வந்துவிட்டார்கள்!" கூப்பர் என்ற கட்டுரையாளர் 'பினான்சியல் ரைம்ஸ்' நாளிதழில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசின் போக்கு எத்தகையது என்பதை நாடிபிடித்துப் பார்த்து அக்கட்டுரையாளர் எழுதியிருப்பது போலத் தெரிகிறது.

யாழ்ப்பாணம் மீது மேற்கொள்ளப்படவிருக்கும் போர் நடவடிக்கைக்காக, துப்பாக்கி பொருத்திய உலங்கு வானூர்திகளும், தரையிறக்க வசதியான வாகனங்களும், விரைவுப் படகுகளும் வாங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

வளர்ச்சித் திட்டங்களுக்கான வெளிநாட்டு உதவிகள் எப்படியெல்லாம் பாழாகிப் போகின்றன என்பதைக் கடன் வழங்கும் நாடுகள் கவனத்திற்கு எடுக்கும் என நம்புகின்றோம்.

அது மாத்திரமல்ல, இவ்வாறான ஒரு இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டால், அதற்குக் கொடுக்கப்பட வேண்டிய விலை மிக மிக அதிகம் என்பதையும் அவர் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

ஆறு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இத்தகைய ஒரு போர் முயற்சியின் விளைவுகள் பற்றிச் சர்வதேச மட்டத்தில் உணர வைக்கிறது இக்கட்டுரை.

ஏற்கனவே எடுக்கப்பட்ட போர் முயற்சிகளினால் பொதுமக்கள் கொல்லப்பட்டதும், சொத்துக்கள் பாழானதும் தென் பகுதியினருக்குத் தெரியவிடாது செய்திகள் திரிபுபடுத்தப்பட்டன.

இங்கு வந்து போகும் சில பத்திரிகையாளர்கள் அவ்வப்போது உள்ளது உணர்ந்து சிலவற்றைத் தெளிவுபடுத்துகிறார்கள்.

ஆனால் உலகச் செய்தியாளர்களின் கட்டுரைகள் தென்னிலங்கையில் உள்ளவர்களின் கண்களைத் திறக்கும் என நம்புகின்றோம்.

கெடுகுடி சொற்கேளாது என்பது எமது ஆன்றோர் அனுபவ மொழி!

பௌத்த சிங்கள மாயையில் சிக்குண்டிருப்பவர்கள் தாமாகவே அறியாவிட்டாலும், பிற நாட்டவர்களின் கணிப்பீடுகளையும், கருத்துக்களையும் செவிமடுத்து, சமாதானத் தீர்வுகள் பற்றிச் சிந்திப்பது நாட்டுக்கு நல்லது.

தவறினால், நாடு மீட்க முடியாத அளவிற்குப் பின்தள்ளப்பட்டுவிடும் என எச்சரிக்க விரும்புகின்றோம்.

சமாதானத்துக்காக மண்டேலா-இளார்க்

சாதித்தவற்றை எவரும் மறுக்கமுடியாது

(சமாதானத்துக்கான இந்த வருடத்துக்குரிய நோபல் பரிசு தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலாவுக்கும், தென்னாபிரிக்க ஜனாதிபதி எவ். டப்ளியூ. டி. கிளார்க்குக்கும் கூட்டாக வழங்கப்பட்டிருக்கிறது. அதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது)

இந்த ஆண்டு சமாதானத்திற்கான நோபல் பரிசு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (ஏ. என். சி.) தலைவர் நெல்சன் மண்டேலாவுக்கும், தென்னாபிரிக்க ஜனாதிபதி எவ். டப்ளியூ. டி. கிளார்க்குக்கும் கூட்டாக வழங்கப்பட்டிருக்கிறது.

இன ஒதுக்கலை உடைக்க இந்த இரு தலைவர்களும் எடுத்த முயற்சிகளையும், ஆற்றிய பணிகளையும் பாராட்டியுள்ள நோர்வீஜியன் நோபல் பரிசுக் குழு இந்த முயற்சிகளின் போது வன்முறைகள் நடந்ததையும் ஒப்புக் கொண்டது.

இந்த முறை சமாதான நோபல் பரிசுக்கு வழிவகுத்த தினம் 1990-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11-ம் திகதியாகும். கறுப்பினத்தவர் மீது விதிக்கப்பட்டிருந்த தடைகள் நீக்கப்பட்டு ஒரு சில நாட்களுக்குள் நெல்சன் மண்டேலா நீண்டகால சிறைவாசத்திலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலை எனக் கூறினால் நெல்சன் மண்டேலா 27 ஆண்டுகால சிறைவாசத்திலிருந்து விடுதலை பெற்று வெளியே வந்ததை, தனது விடுதலையை மட்டும் குறிப்பிட்டு பேசவில்லை. தென்னாபிரிக்காவிலுள்ள எல்லா கறுப்பின மக்களின் சுதந்திரத்தை இன ஒதுக்கலிலிருந்து விடுவிக்கும் விடுதலையைத் தான் அவர் குறிப்பிட்டார்.

தென்னாபிரிக்க அரசை வன்முறையால் வீழ்த்த முயற்சித்த குற்றத்திற்காக அவர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டபோது ஜனநாயக முறையிலும் எல்லா மக்களும் ஒற்றுமையாக நட்புறவுடன் வாழக்கூடிய சுதந்திரமான சமூக சமுதாய அமைப்பிலும் உள்ள நம்பிக்கையை தமது வழக்கு விசாரணையின் போது வலியுறுத்தினர். இருந்தும் கூட அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. 27 ஆண்டு கால சிறைவாசம் அது.

நெல்சன் மண்டேலாவை விடுதலை செய்வதற்கு சில நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதி டி கிளார்க் ஏ. என். சி மீது விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கினார். சமாதான வழியில் செல்லுமாறு அவர் கறுப்பினத் தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

"திறந்திருக்கும் கதவுவழியாக வாருங்கள். அரசுடனும் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் முக்கிய பலம் வாய்ந்த ஏனைய தலைவர்களுடனும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளுங்கள். பேச்சுவார்த்தைக்கான காலம் வந்து விட்டது" என்றார் டி.கிளார்க்.

தென்னாபிரிக்காவில் வெள்ளையர்கள் தான் ஆட்சி நடத்த வேண்டும் என உரக்கக் கூறி வந்தவர் தான் இந்த கிளார்க். ஆனால் அவர் 1989 ஆம் ஆண்டு பதவிக்கு வந்ததும், உடனடியாக வேறு கொள்கைகளைக் கடைப்பிடித்தார்.

அமைதி ஆர்ப்பாட்டங்களை அனுமதித்தார். அவசரகால நிலையை நீக்கினார். 1991-ம் ஆண்டு இன ஒதுக்கலின் முக்கிய மூன்று தூண்களை— பெருமளவு நிலப்பகுதியை வெள்ளையர்க்கு ஒதுக்கிய சட்டம், கறுப்பின மக்கள் வாழக்கூடிய பகுதிகளைக் குறிக்க வரையறைச் சட்டம், ஒவ்வொருவரையும் இன ரீதியில் அதாவது இவர் கறுப்பர், இவர் வெள்ளையர் இவர் நிறத்தவர் என பாகுபடுத்தும் சட்டம் என்ற மூன்று சட்டங்களையும் நீக்கினார்.

1991-ம் ஆண்டில் அதிகாரப் பங்கு குறித்தபேச்சுவார்த்தைகள் துவங்கின. சமாதான முயற்சிகளுக்கு இருதரப்பு தீவிரவாதிகளிடமிருந்தும் எதிர்ப்புகளும் எழுந்தன. இன்னமும் அந்த எதிர்ப்புகள் இருந்து கொண்டே இருக்கின்றன.

ஏ. என். சி ஆதரவாளர்களை சமாதானப்படுத்தி அவர்களின் சீற்றத்தை தணித்து அவர்களை நீதிவழியில் நடத்திச் செல்வதற்கு மண்டேலா தனது முழுத் திறமையையும் செல்வாக்கையும் பயன்படுத்த வேண்டியிருந்தது.

இன ஒதுக்கல் கொள்கை ஏற்படுத்திய சீற்றம் தணிவது சுலபமல்ல என்பதை தான் உணர்வதாக அவர் தன் ஆதரவாளர்களிடம் கூறினார்.

ஆனால் வெற்றித்தீர்வு என்பது அமைதி தான். சமாதானம் தான் அரசியலில் சகிப்புத்தன்மைதான் எனவும் நிலையை என்னவாக இருந்தாலும் நிதானத்தை இழக்காது அமைதியாக இருக்கக் கூடிய வல்லமையேயாகும் என்றார் நெல்சன் மண்டேலா.

நெல்சன் மண்டேலாவும் டி. கிளார்க்கும் இதுவரை சாதித்தவற்றை யாரும் மறுக்க முடியாது. ஆனால் தென்னாபிரிக்காவில் அமைதி முற்றாக நிலைநாட்டப்படுவதற்கு முன்னர் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது.

நாட்டில் அரசியல் வன்முறைகள் மிக மோசமான அளவில் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டில் முதல் ஒன்பது மாதங்களில் மட்டும் மூவாயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டிருப்பதாக கூறப்பட்டிருக்கிறது.

அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் தேர்தல்கள் நடக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் வெள்ளை இன மற்றும் கறுப்பு இன வலது சாரிக் குழுக்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகளிலிருந்து வெளிநடப்புச் செய்திருக்கின்றன.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் நோபல் குழு சமாதானத்துக்கான பரிசை மண்டேலாவுக்கும், டி கிளார்க்குக்கும் வழங்கியிருக்கிறது. இந்த ஆண்டு சமாதானப் பரிசுக்கான ஏனைய வேட்பாளர்களான இரட்சணிய சேனை, அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றிலும் பார்க்க பரிசுக்கு உகந்தவர்கள் நெல்சன் மண்டேலாவும், எப். டபிள்யூ. கிளார்க்கும் தான் உகந்தவர்கள் என்று நோபல்குழு தீர்மானித்திருக்கிறது. (இ)

இராசிபலன்

17-10-1993

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி 1)

துதியை பி. ப. 1.36 வரை. சுவாதி காலை 7.03 வரை. சித்தயோகம் இராகுகாலம் மாலை 4.32 முதல் 6.02வரை சுபநேரம் காலை 9.02 முதல் 10.32 வரை

மேடம்: பிறருடைய உதவி, புதிய அறிமுகம், பாராட்டு

இடபம்: புதிய திட்டம், பணவரவு, குடும்ப சிறப்பு

மிதுனம்: சகோதர மனஸ்தாபம், காரியதடை, அலைச்சல்.

கடகம்: சிறிது ஏமாற்றம், மனக்கவலை, கருத்து வேறுபாடு.

சிம்மம்: அதிக எதிர்பார்புகள் பெரியோர் ஆசி, சுபச்செலவு

கன்னி: தாமதமான செயல் மறைமுக எதிர்ப்பு, பகைமை

துலாம்: மனஉறுதி கடும் முயற்சி, காரியஅனுகூலம்

விருச்சிகம்: தொழில் பகை, அதிக பயம், மனக்குழப்பம்

தனுசு: உறவினர் ஆதரவு, தாமதவெற்றி, தெய்வ தரிசனம்

மகரம்: பெண்களால் உதவி தானதர்மம், கடும் உழைப்பு

கும்பம்: நண்பர்கள் குறை கேட்டல், மனவேதனை, அகாலபோசனம்

மீனம்: காரணமற்றகவலை உடல்நிலைபாதிப்பு, கடன்

— ஜோஸ்யர்

திருட்டு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலையின் கதவு இரவு வேளையில் உடைக்கப்பட்டு பணம், பாடசாலைக் கூட்டுறவுச் சங்க விற்பனைப் பொருட்கள் உட்பட சுமார் 1500 ரூபா திருடப்பட்டுள்ளதாக பருத்தித்துறை தமிழீழ காவல்துறையில் புகார் செய்யப்பட்டுள்ளது. (52)

இன்று

(கொழும்புத்துறை)

"செவ்வந்தி" கையெழுத்துப் பிரதி சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று 17-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு வட்டைப்பிராய் சரஸ்வதி சனசமூக நிலையப் பாலர் பாடசாலை மண்டபத்தில் நிலைய கல்விக் குழுத் தலைவர் திரு இராசேந்திரம் ஸ்ரீபதி தலைமையில் நடைபெறும். —154

0 0 0

(யாழ்ப்பாணம்)

கல்வி நிர்வாக சேவை அலுவலர் சங்கத்தினால் இன்று 17-ம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்விப் புனரமைப்புக் கலந்துரையாடல் நடைபெறும்.

0 0 0

யாழ்ப்பாணம்)

நாவற்குழி கிழக்கு காந்தி சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி நிலைய முன்றலில் இன்று 17-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் நடைபெறும்.

பஞ்சு தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

மானிப்பாயில் இயங்கி வரும் தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் பஞ்சுக்கும் மற்றும் மருந்து கட்டுவதற்கு தேவையான வின்ரர், கோஸ் ஆகியவற்றிற்கும் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. முக்கிய பொருளான பஞ்சு இல்லாமையால் ஊசி போடும் நோயாளர்களுக்கும் மருந்து கட்ட வரும் நோயாளர்களுக்கும் தேவையான சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாது இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்து அறியப்படுகின்றது. (72)

வனம் செழித்தால்
வளம் கொழிக்கும்

கவிதைக் களஞ்சியம்

கண்ணதாசன்!

பூவிரிந்த சுகம் கேட்கும்
பூமித்தாய்ச் சோலையிலே
பனிவிரிந்த சுகம் கேட்கும்
பாவலனே!
நாவிரிந்து
வம்பளக்கும் "கவிஞரெல்லாம்"
வாலைப்பிடிக் கொண்டேயுன்
கொம்பளக்க வருகின்றார்,
குரைத்து!

★

நேற்று வரை உன்னெதிரில்
நேர்நிற்கப் பயந்தவர்கள்
தூற்றுவதை யான் பெற்றேன்
துளியும்!
மாற்று வரை
தானேறித் தவழுதடா
தமிழ்க்கவிதை உன்னாலே
வானேறி இருகுதடா
வளம்!

★

பாட்டுக்குள் மெட்டடங்கிப்
பாய்கின்ற வானொலியைக்
கேட்டுக் கிறுகிறுத்தேன்
கேளும்!
நாட்டுக்குள்
வாசாய் முத்தமிழின்
வடிவெடுத்து வந்தனை
பாசாய்க் கவியமுதம்
படைப்பு!

- ஜெ. கி. ஜெயசீலன்

(இன்று கவியரசர் கண்ணதாசனின் 12 ஆவது ஆண்டு நினைவு நாளாகும்)

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

★ வடக்கில் நடாத்தப்படும்

அடுத்த படை நடவடிக்கை; இராணுவ தரப்பில் மௌனம்

(கொழும்பு)

வடபகுதியில் அடுத்து மேற்கொள்ளப்படவுள்ள இராணுவ நடவடிக்கை குறித்து எதுவும் கூற இராணுவ வட்டாரங்கள் மறுத்துவிட்டதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் வடக்கில் புலிகளுக்கு எதிராக பாரிய யுத்தம் ஒன்றை நடாத்த படை முகாம்களில் புதியவர்களுக்கு தீவிர இராணுவப் பயிற்சிகள் நடைபெற்று வருவதை அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனராம்.

இதேவேளை அடுத்த புத்தாண்டிற்கிடையில் வடக்கில் பாரியதொரு இராணுவ நடவடிக்கை இடம்பெறலாமென இராணுவ தரப்பில் சூசகமாக தெரிவிக்கப்படுகிறது என 'லண்டன் பினான்ஷியல் டைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. —இ

வெளிநாடுகளிலிருந்து

யாழ். வந்த 6 லட்சம் ரூபாவை படையினர் எடுத்துள்ளனர்

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளிலிருந்து தமது உறவினர்களுக்கு அங்குள்ளவர்கள் கடிதங்கள் மூலம் அனுப்பிய ஆறுலட்சம் ரூபாவிற்கும் மேற்பட்ட பணத்தை படையினர் அவர்களின் கடிதங்களுள் இருந்து எடுத்துள்ளனர்.

இவ்வாறு வடபிரதேச இலங்கை வங்கி முகாமையாளர் திரு. கே. கணேசமூர்த்தி யாழ். வங்கியாளர் சங்க நூலகத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்து பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் தமிழ்மக்களுக்கு அரசு இன்று சொல்லொணா நெருக்கடிகளை கொடுத்து வருகின்ற போதிலும் அவர்களுக்கு இறைவன் கொடுத்த மனோபலம் தான் இன்று உயிரோடு வாழ்கிறார்கள் என்றார். —எஸ்-ஜி

யாழ். மாவட்டத்தில்

புதிதாக ஒன்பது பேருக்கு தொழுநோய்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் கடந்த செப்டம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட தொழுநோய் ஆய்வின்போது, 9 பேருக்குப் புதிதாகத் தொழுநோய் தொற்றியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 5 பேருக்கும், கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பேருக்கும், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பேருக்கும் தொழு நோய் ஏற்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

இவர்களுக்கு உரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருவதாக யாழ். தொழு நோய்த் தடுப்பு உத்தியோகத்தர் தெரிவித்தார். -72

5 ஓவர் கிரிக்கெட்; இலங்கை சாம்பியன்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் அண்மையில் நடைபெற்ற அணிக்கு அறுவர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் 5 ஓட்டங்களால் இங்கிலாந்தை வெற்றி கொண்டு இலங்கை சாம்பியனாகியது.

முதலில் ஆடிய இலங்கை அணி 5 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 87 ஓட்டங்களை பெற்றது. இங்கிலாந்து 4·4 ஓவரில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 72 ஓட்டங்களை பெற்றது.

அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவை இலங்கை வென்றது இதில் அணித்தலைவர் அர்ச்சுண ரணதுங்க தனது ஓவரில் அடுத்தடுத்து 3 விக்கெட்டுகளை வீழ்த்தி 'ஹற்றிக்கை' பெற்றார்.

இப்போட்டித் தொடரில் ஆஸ்திரேலியா, இந்தியா, இலங்கை, தாய்லாந்து, சிங்கப்பூர், மே. இந்தியா, மலேசியா, ஹொங்கொங், பங்களாதேஷ் பங்குபற்றின. —சி

கலைஞர் கருணாநிதிக்கு 'கறுப்பு பூனை' பாதுகாப்பு

(சென்னை)

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதிக்கு மத்திய அரசு 'கறுப்புப் பூனை' பாதுகாப்பு வழங்குவதற்கு ஆலோசனை நடாத்துவதாக கூறப்படுகின்றது.

விடுதலைப் புலிகள் தன்னைக் கொலை செய்ய முயற்சிப்பதாக மத்திய அரசின் எச்சரிக்கைகளை தான் அலட்சியம் செய்வதாக இல்லை என்று திரு. கருணாநிதி சென்னையில் கூறியுள்ளார்.

திரு. கருணாநிதிக்கு தற்போது மாநிலப் பொலிசாரின் விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (வி-இ)

ஆங்கில ஆசிரியர்க்கு பதவி வெற்றிடம்

(திருநெல்வேலி)

பாடசாலைகளில் உள்ள ஆங்கில ஆசிரியர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு கல்வித் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது ஒப்பந்த அடிப்படையில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக கடமையாற்றி வரும் ஆசிரியர்களுடன் மேலும் இவ் அடிப்படையில் பகுதிநேர ஆசிரியர்கள் நியமிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது ஆங்கில ஆசிரியர்களின் வெற்றிடம் பல பாடசாலைகளில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. —157-இ

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10 336/B

பரீட்சைக்குத் தோற்றலாம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்விற்கு இராணுவ நடவடிக்கையினால் தோற்றமுடியாது போன தென்மராட்சி, பளை, அச்சுவேலிப் பகுதி மாணவர்களுக்கு மீண்டும் தேர்வில் தோற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேர்வில் தோற்றும் மாணவர்கள் இம்மாதம் 30, 31ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் விஞ்ஞானச் செய்முறைத் தேர்வில் தோற்ற வேண்டுமென தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார். —இ

பிரேமாவைக்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காக பிரேமதாசாவைச் சுற்றி பத்து விடுதலைப்புலிகளின் தற்கொலைப் படையினர் வெடிகுண்டுகள் சகிதம் பின் தொடர்ந்து சென்றதாக ஐலண்ட் பத்திரிகை நேற்று பரபரப்பான ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

இச்செய்தி மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

'மே' தின ஊர்வலத்தில் வந்துகொண்டிருந்த ஜனாதிபதி பிரேமதாசாவை பாபு என்ற இளைஞர், கொலை செய்யத் தவறும் பட்சத்தில் மிகுதி ஒன்பது பேரும் ஏதாவது விதத்தில் ஜனாதிபதி பிரேமதாசாவை சுற்றி வளைத்து கொலை செய்ய திட்டமிட்டிருந்தனர்.

இளைஞர் பாபுவின் இலக்கு தவறவில்லை. ஜனாதிபதி பிரேமதாசா பலியானார். இளைஞன் மற்ற ஒன்பது பேரும் உடனேயே வெடிகுண்டுகளுடன் தலைமறைவாகிவிட்டனர்.

மேற்படி ஒன்பது பேரும் மறைத்து வைத்திருந்த வெடிகுண்டுகளில் ஒன்றே தற்போது கொழும்பு முகத்துவாரக் கடற்கரையில் கண்டு பிடிக்கப்பட்டது என்று 'ஐலண்ட்' பத்திரிகை செய்தியை வெளியிட்டுள்ளது. —வி-இ

ஆங்கில ஆசிரியர் பயிற்சி ஆரம்பிக்கப்படவில்லை

(திருநெல்வேலி)

ஆங்கில ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து வவுனியா, நீர்கொழும்பு ஆகிய இடங்களில் பயிற்சிக்காக அழைக்கப்பட்டவர்களில் வவுனியா, நீர்கொழும்புக்கு சென்றவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இப்பயிற்சியினை இங்கு நடாத்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டபோதும் இதுவரை இப்பயிற்சிகள் இங்கு ஆரம்பிக்கப்படவில்லை. வவுனியா நீர்கொழும்பிற்கு சென்றவர்களுக்கான வகுப்புக்கள் குறிப்பிட்ட திகதியில் ஆரம்பமாகிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. —157-இ

சுதந்திரக்கட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் நான் மிகவும் பலமுள்ளவனாக மாறிவருவதை அவர்கள் பார்த்தார்கள். நாட்டிலும், நாடாளுமன்றக் குழுவிலும் நான் மிகவும் பல முள்ளவனாக மாறி வருவதைப் பார்த்தார்கள்.

இதனால் என்னை என் அன்னையாரும் மற்றவர்களும் சேர்ந்து ஓரங்கட்டத்தொடங்கினார்கள். இதைத்தொடர்ந்து என் சகோதரியை முன்னுக்குக் கொண்டுவரத்தொடங்கினார்கள்.

என் தாயாருக்குப்பின் என் சகோதரி இதற்காக மிகவிழிப்போடு செயல்பட்டார்கள். என் அன்னையாருக்குப் பின் நான் பதவிக்கு வராதபடி செயல்பட்டார்கள்.

என் அன்னையார் அரசியலில் இருந்து விலகினதும் கட்சியின் தலைமைப் பதவி இயற்கையாகவே எனக்கு வந்திருக்கும் அப்படி நடவாமல் இருப்பதற்காக அவர்கள் செயல்பட்டார்கள் ஆகவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இனி மேல் எதிர்காலமே இல்லை என்றும் கூறினார். —வி-இ

காமினியை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறியதாவது:

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஒரு பகுதியினர் காமினி திஸநாயக்காவுடன் சேர்ந்து ஐக்கியதேசியக்கட்சியுடன் இணைந்தால் இதற்கு எதிராக இயங்கும் ஐக்கிய தேசிய ஜனநாயக முன்னணியின் ஏனைய உறுப்பினர்கள் எதிர்க்கட்சியோடு இணைந்து மாகாணசபை நிர்வாகத்தை செயற்படுத்தக்கூடும் என்றார். —ம-இ

கொழும்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சென் ஜேம்ஸ் அவென்யூவில் தமிழ்க் குடும்பம் ஒன்று இருந்த வீட்டில் இந்த ஆயுதங்கள் நிலத்துக்கு கீழ் புதைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. கைக்குண்டுகள், துப்பாக்கிகள், ரவைகள் இதில் அடங்கும்.

சட்டத்துக்கு விரோதமாக ஆயுதங்களை வைத்திருந்த குற்றச் சாட்டின்பேரில் வீட்டுச் சொந்தக்காரர்கள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர். இந்த ஆயுதங்கள் தற்போது பேலியகொட பொலிசில் வைக்கப்பட்டிருக்கின்றன என்றும் கூறப்படுகிறது. —ம-இ

திருமலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சென்பேசன்' என்ற இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த இராணுவ நடவடிக்கையை வழிப்படுத்துவதற்கு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன, கிழக்குப் பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம, திருகோணமலை இராணுவப் பொறுப்பாளர் பிரிகேடியர் ஸ்ரீ டி பீரிஸ் ஆகியோர் திருமலையில் தரித்து நிற்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

திருகோணமலை மாவட்டத்தின் முதலிக்குளம், சாகரபுர, கும்புறுமூலை ஆகிய பகுதிகளில் இந்த இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-இ)

மரத்திலிருந்து வீழ்ந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

மரத்தில் ஏறியபோது தற்செயலாகத் தவறி விழுந்த ஒருவர் சுயநினைவிழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

யாழ்ப்பாணம் நல்லூரில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் வி. துரையப்பா (வயது 70) அரசடி என்ற வயோதிபரே மரணமானவராவார்.

சடலம் மரண விசாரணைக்காக யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. —இ

தற்கொலை படை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முக்கிய கேந்திர நிலையங்களில் திடீர் தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தலாமென்ற தகவல்கள் கிடைத்துள்ளதாம்.

இதனையடுத்து நேற்றும் கொழும்பின் பல முக்கிய பகுதிகளில் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டதுடன் நேற்று அதிகாலை முதல் நகரின் பல இடங்களிலும் ஹோட்டல்கள், விடுதிகள், தமிழர் பெருமளவு வாழும் பகுதிகள் மற்றும் வீதிகள், காரியாலயங்கள், தனியார் கல்வி நிலையங்களில் வைத்து 500 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் தற்போது பத்து முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார்களாம். (இ)

தமிழர் மத்தியில்

(1ம் பக்கம் தொடர்ச்சி)

தலைகாட்டுவதில்லையாம்.

கைது செய்யப்படும் தமிழ் இளைஞர்களை விடுவிக்க படைமுகாமுக்கு செல்வதே தற்போது கொழும்பிலுள்ள பெருமளவு தமிழ் பெற்றோர்களின் வேலையாகிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. —சி

இல. வெளியுறவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடாத்துவதெனவும் இங்கு முடிவு செய்யப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை அமைச்சர் திரு. தினேஷ்சிங் அண்மையில் அமெரிக்காவில் அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத்துடன் பேச்சுக்கள் நடாத்தியுள்ளார். (இ)

குவாக்கஸ் குழு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்குழுவினர் இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முயற்சித்து வந்ததும் குறிப்பிடத்தக்கது. —எஸ்-ஜி